**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 24.02.2026**
**OS. No. 37/2023**
**வழக்கு சாட்சி PW.2–ஆறுமுகம், த/பெ.குஞ்சப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) வாதி பழனிசாமி என் உறவினரா என்றால் ஆமாம். பிரதிவாதி தங்கவேலின் சொத்தானது வாதியின் சொத்திற்கு அடுத்தாற்போல் அமைந்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி தங்கவேல் வாதி பழனிசாமியின் சொத்தை தனக்கு விற்குமாறு கூறி அவரிடம் பிரச்சனை செய்து வருகிறார். வாதி தனது சொத்தை ராஜமுத்து என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தங்கவேல் மேற்கண்ட ராஜமுத்துவிடம் தனக்கு ஏன் நிலத்தை விற்கவில்லை என்று ஏதேனும் பிரச்சனை செய்தாரா என்றால் இல்லை. பிரதிவாதியின் நிலத்தை வருவாய் அலுவலர்கள் அளவீடு செய்ய வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் நிலத்தை அளவீடு செய்ய வந்த சமயத்தில் நானும், வாதியும் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல.

2) பிரதிவாதி தங்கவேல் அவருடைய நிலத்தை வருவாய் அலுவலர்களை வைத்து அளந்து கொள்வதற்கு எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு ராஜமுத்து நிலத்தை விற்றது தொடர்பாக அந்த நிலத்தை தனக்கு விற்கவில்லை என்று வாதி பழனிசாமிக்கு மன வருத்தம் இருந்தது என்றால் சரிதான். பிரதிவாதி நிலத்தை விற்குமாறு வாதியிடம்பிரச்சனை செய்ததாக சொல்லும் சம்பவத்திற்கு காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. வாதி பழனிசாமி தன்னுடைய நிலத்தை அளப்பதற்கு வருவாய் துறையில் ஏதேனும் மனு கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை.

3) பிரதிவாதி தன் நிலத்தை வருவாய் அலுவலர்களை வைத்து அளக்க முற்பட்ட போது வாதி ஆட்சேபனை தெரிவித்தார் என்றால் சரிதான். பிரதிவாதி நிலத்தை அளக்க வருவாய் அலுவலர்கள் வந்தால் நான் எந்த பிரச்சனையும் செய்யமாட்டேனா என்றால் செய்யமாட்டேன்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.